# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST – 2008

## TML 3.12 – PRESCRIBED TEXT - II

**முதலாம் வினா உட்பட ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி, அடிக்கோடிட்ட தொடர்களில் நீர்காணும் நயத்தினையும் விளக்குக.

(அ) வான்கடற் பரப்பில் தூவற்கு எதிரிய
மீன் கண்டன்ன மெல் அரும்பு ஊழ்ந்த
முடவு முதிர் புன்னைத் தடவு நிலை மாச்சினை
புள் இறை கூரும் மெல்லம் புலம்ப
நெய்தல் உண்கண் பைதல கலுழ
பிரிதல் எண்ணினையாயின் நன்றும்
அரிது உற்றனையால் பெரும உரிதினின்
கொண்டு ஆங்குப் பெயர்தல் வேண்டும் கொண்டலொடு
குரூஉத்திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டு மணல் அடைகரை கோட்டுமீன் கெண்டி
மணம்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளம் கெழு தொண்டி அன்ன இவள் நலனே.

(-அம்மூவனார் : அகநானூறு – 10)

(ஆ) இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டி
கண் திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து
கடியுடை வியன்நகரவ்வே; அவ்வே,
பகைவர்க் குத்தி கோடு நுதி சிதைந்து
கொல் துறைக் குற்றிலமாதோ; என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எம் கோமான் வைந்நுதி வேலே.

(ஔவையார் : புறநானூறு – 95)

(இ) யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந்து அகல் நிறைய நெய் சொரிந்து
பருஉத்திரி கொளீஇக் குரூஉத்தலை நிமிர் எரி
அறுஅறுகாலை தோறு அமைவரப் பண்ணி
பல்வேறு பள்ளி தொறும் பாய் இருள் நீங்க
பீடுகெழு சிறப்பின் பெருந்தகை அல்லது
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்
வரைகண்டன்ன தோன்றல, வரைசேர்பு
வில்கிடந்தன்ன கொடிய, பல்வயின்
வெள்ளி அன்ன விளங்கு சுதை உரீஇ

மணி கண்டன்ன மாத்திரள் திண்காழ்
செம்பு இயன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ ஒரு கொடி வளைஇ
கருவொடு பெயரிய காண்பின் நல்இல்

(நெடுநல் வாடை – 101 - 114)

02. "பிரிவு நிலையிலேயே காதலர்களது அன்புணர்ச்சி நன்கு வெளிப்பட்டுத் தோன்றுகிறது". – அகநானூறு பாலைத்திணைச் செய்யுள்களின் அடிப்படையில் இக்கூற்றினை நிறுவுக.

03. மன்னர்களின் வீரம், கொடைத்திறம் என்பவற்றைப் புறநானூற்றுப் புலவர்கள் பல்வேறு உத்திகளைக் கையாண்டு புனைந்துரைக்குமாற்றினைத் தெளிவுறுத்துக.

04. 'நெடுநல்வாடை'யில் கூதிர்காலம் உயிரோட்டத்துடன் வருணிக்கப்படுமாற்றினைத் தெளிவுறுத்துக.

05. வள்ளுவர், ஒரு அமைச்சனுக்கு இருக்கவேண்டிய அடிப்படைத் தகுதிகளை வலியுறுத்தும் பாங்கினை விளக்குக.

06. " 'கலம்பகம்' புரவலர்களின் புகழ்பேசுவதற்கு வாய்ப்பானதொரு இலக்கிய வடிவம் என்பதை 'நந்திக்கலம்பகம்' நன்கு புலப்படுத்தி நிற்கிறது". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

07. 'கோயில் மூத்த திருப்பதிகம்' , 'கோயிற்பதிகம்' என்பவற்றில் மாணிக்கவாசகரின் பக்தியுணர்வும் கவித்திறனும் புலப்படுமாற்றினை விளக்குக.

08. 'போர்பாடியத'ன் அடிப்படையில் 'கலிங்கத்துப் பரணி' ஆசிரியர் சயங்கொண்டாரின் படைப்பாளுமையை மதிப்பிடுக.

*****